DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C No. 50 of 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW- 5 (L.W- 4)** |
| **Name** | **:** | **திரு. மகேந்திரன்** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>14.03.2023</u>**

A1, A2 Present. , A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed. 3-வது எதிரியை பொறுத்து சாட்சி அடையாளம் காட்டுவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று 3-ம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கூறிய நிலையில் சாட்சியை விசாரிக்க உத்தரவிடப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கான்டிராக்ட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1-ம் எதிரி பிரபு (எ) சலிமை தெரியும். 2-வது எதிரியை தெரியாது. 3-வது எதிரியை தெரியாது. கடந்த மார்ச்

மாதம் 2016-ல் 1-ம் எதிரி ஒரு பெண்ணிடம் இருந்து கழுத்து தங்க செயினை பறித்து சென்று விட்டார் என்ற விசயத்தை எனக்கு போலிசார் சொன்னார்கள். மேற்படி 1-ம் எதிரி பிரபுவை 2016-க்கு முன்பு சுமார் 2 ஆண்டுகளாக எனக்கு தெரியும். நான் குடியிருக்கும் பகுதியில்தான் அவர் குடியிருக்கிறார். மேற்படி 1-ம் எதிரி பெண்ணின் கழுத்தில் செயினை அறுத்தவுடன் ஒருவார காலம் எங்கள் பகுதியில் தென்படவில்லை. எங்கேயோ சென்று விட்டார். மார்ச் 2016-ல் தேதி ஞாபகம் இல்லை, ஒருநாள் அதிகாலை 3 மணியளவில் போலிசார் 1-ம் எதிரியை குன்னூர், வண்டிச்சோலை சந்திப்பில் எதிரியை கைது செய்தபோது நான் உடன் இருந்தேன், போலிசார் என்னை அழைத்து சென்றனர். பின்னர் 1-ம் எதிரியை போலிசார் அப்பர் குன்னூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். பின் என்னை போலிசார் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டனர். பின்னர் மதியம் 3 மணியளவில் போலிசார் என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் பின் அங்கு சென்றேன். இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். என்னுடன் மற்றொரு சாட்சியாக கிராம நிர்வாக அலுவலர் கில்பெர்ட் ராய் சாட்சி கையொப்பம் போட்டார். மேலும் 5 கைப்பற்றுதல் மகஜர்களில் நானும் கில்பெர்ட் ராயும் கையெழுத்து போட்டோம். விடியற்காலை 3 மணியளவில் 1-ம் எதிரி வாக்குமூலம் கொடுத்தார் என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது, அவரை கைது செய்த இடத்திலேயே நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

2-ம் எதிரி மாலை 3, 4 மணியளவில் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்பதை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னிடமிருந்து 6, 7 கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். 1-ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அசாஆ 11 ஆகும். 2-ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அசாஆ 12 ஆகும். 5 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள எனது கையொப்பங்கள் முறையே அசாஆ 13 முதல் அசாஆ 17 ஆகும்.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பு அனுமதியுடன் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 05.03.2016-ம் தேதி அதிகாலை 3 மணிக்கு 1-ம் எதிரியை வண்டிச்சோலை ஜங்சனில் வைத்து போலிசார் கைது செய்தபோது என்னுடன் விஏஓ கில்பெர்ட் ராய் உடன் இருந்தார் என்றால் சரிதான். 1-ம் எதிரி அந்த இடத்தில் வைத்தே போலிசாரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அதிகாலை 4 மணிக்கு கொடுத்தார் என்றும் அந்த இடத்திலேயே நானும், விஏஓ-வும் சாட்சி கையொப்பம் போட்டோமா என்றால் சரியல்ல.

அந்த இடத்தில் இருந்து 1-ம் எதிரியிடம் இருந்து ரூபாய் 1000 நோட்டை போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும்

அதில் நானும் கில்பெர்ட் ராயும் கையெழுத்து போட்டோமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

பின் காலை 7 முதல் 7.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து 1-ம் எதிரி ஒரு சிறிய கத்தி ஒன்றையும், 24 எண்ணிக்கையிலான 500 ரூபாய் கள்ள நோட்டுகளை போலிசாரிடம் எடுத்து ஆஜர்படுத்தினார்கள் என்றும் அதில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் கையொப்பம் என்னுடையது அந்த பொருட்களை என் முன்னிலையில் போலிசார் கைப்பற்றியதாக எனக்கு தெரியவில்லை.

அதை தொடர்ந்து 05.03.2016 அன்று காலை 08.30 முதல் 9 மணியளவில் ஆரணி அவுஸ் கோழிக்கடை, கோத்தகிரி ரோடு, ஊட்டியில் வைத்து 3-ம் எதிரி ரவியை கைது செய்து அவரது வீட்டில் இருந்து 25 எண்ணிக்கையிலான 500 ரூபாய் கள்ள நோட்டுகளை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றால் கையொப்பம் என்னுடையது அந்த பொருட்களை என் முன்னிலையில் போலிசார் கைப்பற்றியதாக எனக்கு தெரியவில்லை.

அதை தொடர்ந்து வண்டிப்பேட்டையில் உள்ள 2-ம் எதிரியின் ஸ்டுடியோவில இருந்து 05.03.2016 அன்று காலை 11.30 முதல் 12.00 மணியளவில் 7 பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்றால் கையொப்பம் என்னுடையது அந்த பொருட்களை என் முன்னிலையில்

போலிசார் கைப்பற்றியதாக எனக்கு தெரியவில்லை.

அதை தொடர்ந்து 1-ம் எதிரி குன்னூர் மௌன்ட் ரோட்டில் உள்ள டாஸ்மாக் பாரில் வேலை பார்க்கும் பாலனிடம் 500 ரூபாய் கள்ளநோட்டை கொடுத்து மது வாங்கினார் என்ற தகவல் போலிசாருக்கு தெரிந்தவுடன் போலிசார் 05.03.2016-ம் தேதி மதியம் 1 மணிக்கு மேற்படி பாலன் வேலை செய்த டாஸ்மாக் கடைக்கு சென்று அந்த 500 ரூபாய் கள்ள நோட்டை போலிசார் பாரில் இருந்து கைப்பற்றியதற்கு நானும், விஏஓ கில்பெர்ட்ராயும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டோம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது ஆனால் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது.

அதை தொடாந்து அன்றைய தினமே மாலை 4 மணியளவில் 2-ம் எதிரி தேவதாஸ் போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை நான் தெரிந்து கொண்டு சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் கையெழுத்து மட்டும் போட்டேன் வேறு எதுவும் தெரியாது. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது 1-வது எதிரி எனது ஊர்காரர் என்பதாலும், மற்ற எதிரிகளுக்காகவும் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1-ம் எதிரி என் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். அதன்

அடிப்படையில் 1-ம் எதிரியை அடையாளம் காட்ட போலிசார் என்னை அழைத்தனர். என்னுடைய கையொப்பங்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை பற்றி எனக்கு தெரியாது. விஏஓ கில்பெர்ட் ராயும் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டார்,

(2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் 1-வது எதிரியின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது )

**மறுவிசாரணை**

**இல்லை**

Sd/. Dr. P. Murugan,
District Judge, Udhagamandalam

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C No. 50 of 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW- 6 (L.W- 6)** |
| **Name** | **:** | **திரு. பாலன்** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>14.03.2023</u>**

A1, A2 Present. , A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed. 3-வது எதிரியை பொறுத்து சாட்சி அடையாளம் காட்டுவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று 3-ம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கூறிய நிலையில் சாட்சியை விசாரிக்க உத்தரவிடப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மெஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2016-ல் டாஸ்மாக் பாரில் விற்பனையாளராக பணியாற்றினேன். தற்போது அந்த வேலையில் இருந்து விலகிவிட்டு மெஸ் உணவகம் நடத்தி வருகிறேன்.

ஆஜர் எதிரிகளில் 1-ம் எதிரியை தெரியும், 2-ம் எதிரியை தெரியாது. 3-ம் எதிரியை தெரியாது. கடந்த 04.03.2016 அன்று நான் வேலை பார்த்த டாஸ்மாக் பாரில் நான் கல்லாவில் உட்கார்ந்து கொண்டு வேலை பார்த்தபோது குடிமகன்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது ஒருவர் 500 ரூபாய் நோட்டை என்னிடம் கொடுத்து தண்ணீர் பாட்டில் கேட்டார். பின் நான் தண்ணீர் பாட்டிலை கொடுத்து விட்டு பணத்தை வாங்கிகொண்டேன். சிறிதுநேரம் கழித்து அந்தநோட்டை பார்த்தவுடன் எனக்கு சந்தேகம் இருந்தது. அந்த நோட்டை யார் கொடுத்தார்கள் என்று பார்த்தபோது நோட்டை கொடுத்தவர் ஓடிவிட்டார், வெளியே வந்து பார்த்தபோது அவர் இல்லை. அன்றையதினமே குன்னூர் டவுன் போலிசிடம் 500 ரூபாய் கள்ள நோட்டு எங்கள் கடைக்கு வந்துள்ளது என்று சொன்னேன். மறுநாள் அப்பர்குன்னூர் காவல் நிலையத்தில் இருந்து மேற்படி 500 ரூபாய் கள்ளநோட்டை என்னிடம் வாங்கி சென்றார்கள். அப்போது போலிசார் 1-ம் எதிரிதான் மேற்படி கள்ள நோட்டை எங்களுடைய டாஸ்மாக் கடையில் கொடுத்ததாக சொல்ல நான் தெரிந்து கொண்டேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட ஒரு 500 ரூபாய் கள்ளநோட்டை சாட்சியிடம் காட்டி அந்த நோட்டுதான் சாட்சி போலிசாரிடம் கொடுத்த நோட்டா என்று வினவியயோது சாட்சி அநத் நோட்டை தொட்டுபார்த்து அது கள்ளநோட்டு என்றும் அதை போன்ற கள்ளநோட்டைத்தான் நான் போலிசாரிடம்

ஒப்படைத்தேன் என்று சொல்வதால் அது சாபொ10-ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் தரப்பில் கள்ளநோட்டை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. எனவே ஆட்சேபனையுடன் மேற்படி வழக்கு சொத்து குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வாதுரையில் சட்ட நெறிகளின் அடிப்படையில் மேற்படி விசயத்தை பொறுத்து வாதுரைக்க அனுமதிக்கப்படுகிறது.

**1-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1-ம் எதிரிதான் மேற்படி சாபொ10 கள்ளநோட்டை என்னிடம் கொடுத்ததாக போலிசார் சொன்னார்கள். 1-ம் எதிரியை நேரடியாக கள்ளநோட்டை கொடுத்தபோது நான் பார்க்கவில்லை. மேற்படி கள்ளநோட்டு என் கைக்கு வந்த தினத்தில் குன்னூர் டவுன் போலிசாருக்கு தகவல் கொடுத்தேன். போலிசார் அன்றைய தினம் என்னிடம் வந்து என்னை விசாரிக்கவில்லை, என்னிடம் எதுவும் கைப்பற்றவில்லை. குன்னூர் டவுன் போலிசார் இன்றுவரை அது சம்மந்தமாக என்னிடம் விசாரிக்கவில்லை. அப்பர் குன்னூர் போலிசார் விசாரித்தபோது கள்ளநோட்டு என் கைக்கு வந்த விசயத்தை பற்றி ஏற்கனேவ குன்னூர் டவுன் போலிசாருக்கு தகவல் சொன்னவிவரத்தை சொல்லி உள்ளேன். போலிசாரிடம் நான் ஆஜர்படுத்திய கள்ளநோட்டில் சிறப்பம்சம் எதுவும் உள்ளதாக நான் எதையும் குறிப்பிடவில்லை.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**

Sd/. Dr. P. Murugan,
District Judge, Udhagamandalam